# நன்றியுரை

புகழ் பூத்த பெரியார் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக ஆய்வு நிகழ்த்த இசைவு நல்கிய, இப்பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக்கட்டுப்பாடு ஆணையர் ஆகியோர்க்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமாரபாளையம், ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையில் பகுதிநேர ஆய்வாளராக மேற்கொள்ள அனுமதியளித்த கல்லூரித் தாளாளரும் சிந்தனையாளருமான **திருமதி. செந்தாமரை** அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பெண்டிரைப் பெண்டிர் நேசித்தால்தான் வாழ்வு மலரும்" என்னும் பொன்மொழிக்கு இலக்கணமாகத் திகழ்பவரும், இவ்வாய்வினை மேற்கொள்ள இசைவளித்த எம்கல்லூரி முதல்வருமான **முனைவர் (திருமதி) எஸ். ஆண்டாள்,** எம்.எஸ்.ஸி, எம்ஃபில்., பிஎச்.டி அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**"ஐஞ்சிறு காப்பியங்களில் மகளிர் நிலை"** என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய எனக்குத் தூண்டுகோலாக அமைந்து, என்னுடைய ஆய்வுக்கு வழிகாட்டியாய் நின்று, அச்சத்தை நீக்கி அதற்குரிய வழிமுறைகளை வகுத்துக் கொடுத்து, மேலும் ஆய்வுப் பணி தொடங்கவும், தொடரவும், நிறைவடையவும் ஒல்லும் வகையெல்லாம் உதவி புரிந்து, ஊக்கப்படுத்தி, ஆய்வேடு செம்மையாகவும், சிறப்பாகவும் அமைவதற்கு உதவிய என் மரியாதைக்குரிய பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர். சு. ஞானசௌந்தரி.,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

அவர்களுக்கு எளியேனின் உள்ளங்கனிந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆய்வுப் பணி முட்டின்றி நிகழ ஆய்வுக்குரிய நூல்களைத் தேவைப்படும்பொழுதெல்லாம் இன்முகத்தோடு கொடுத்துதவிய கல்லூரியின் நூலகர், **திருமதி. ஜே. ரோஸலிண்ட்.,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்., எம்.ஃபில்., அவர்களுக்கும் அவரின் உதவியாளராகப் பணிபுரியும் குணசேகரன் அண்ணாருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லாற்றானும் எனது ஆய்வுக்கு உதவிபுரிந்த கல்லூரி அலுவலகப் பணியாளர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

மற்றும் பவானி கிளை நூலகம், சென்னை கன்னிமாரா நூலகம், பெரியார் பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றின் பொறுப்பாளர்களுக்கு என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

உடல் சோர்ந்த பொழுதும், உள்ளம் நலிந்த பொழுதும், உற்சாகமூட்டி, பல நிலைகளில் என் ஆய்வுக்கு உறுதுணையாய் நின்ற என் அன்புக் கணவர் **திரு. இ. அலெக்ஸாண்டர்** அவர்கட்கும், என் நன்றிக் கடப்பாட்டினை உரித்தாக்குகிறேன். மேலும் பலவகையில் உதவிபுரிந்த என் அருமை மகள் **செல்வி. அ. ஜெஸ்லின் நவீனாவுக்கும்** என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைப் பிழையின்றி நன்முறையில் கணினியில் பதிவு செய்து தந்த பபிதா கிராபிக்ஸ், பவானி அவர்களுக்கும் என் மனநிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. ரெஜினா மேரி

**இரா. ரெஜினா மேரி**